# கடற்கரை கவியரங்கு– 655

நாள்: **02-11-2025**

## தமிழும் அறிவோம் தமிழ் நெஞ்சே!

தேமதுர தமிழ் என்று திக்கட்டும் பேசுகின்றோம்!
மாமதுரை பிறந்தது என்று மனங்கூட்டி மகிழ்கின்றோம்!
மடவார்தம் மொழியிலே தமிழ்தான் இல்லை!
மறுவின்றி பிள்ளைகளும் தமிழைக் கற்பதில்லை!

பண்ணு தமிழ் பேசியே வாழுகின்றார் நாளும்!
பைந்தமிழ் சொல்லிற் கங்கே பயனேதும் இல்லை!
அழகான தமிழ்ச் சொல்தனைதானே விடுத்து,
அவல நிலை கொள்வதிலே தமிழருக்கிங்கே

இணையானோர் தரணியிலே எவரும் இல்லை!
அருவியென்னும் அழகான தமிழ்ச் சொல்லை;
அழகாக விட்டெறிந்து விட்டே ஆங்கிலத்தில்,
மொழி மாற்றி நீர்வீழ்ச்சி எனச் சொல்லியே,

நிரந்தரமாக வீழ்த்து கின்றோம் தமிழைத்தானே!
மறந்தேனும் நற்றமிழைப் பேசுவார் எவருமில்லை!
துறந்தாரோ தாய்மொழிக் கல்வி தனையிங்கு!
துணைவருமோ பிறமொழிதான் அறிவைச் செய்ய?

பணிதனிலே பயணிக்க நமக்கு ஆங்கிலம் தேவை!
அணியாக கணினியியல் முதலான கற்கவும் தேவை!
மணியாக வாழ்வியலை சொல்லத் தாய்மொழி வேண்டும்!
தனியாக நம்மொழிக்கோ பலதகுதிகள் உண்டு!

தனித்துவமாய் இலக்கணமும் சொல்லி வைத்தார்!
தகைவுடனே வாழ்வியல் சொல்லிடத்தான் திருக்குறளே!
பகைகொண்டு தமிழைத்தான் சிதைத்திடவே சிலரும்,
புகையாகத் தமிழ்மணத்தை நாளும் சிதைகின்றாரே!

புலம்பாமல் யாவரும் ஓர்விதி செய்வோம் இன்றே!
புதுமையென தமிழரெல்லாம் தமிழைக் கற்போம்!
வதுவைகூடும் மணச் சடங்கைத் தமிழில் செய்வோம்!
வளமாக பிள்ளைகட்கும் தமிழில் பெயர் சூட்டுவோம்!

- **கவிஞர் கவிவளவன்** ஆகிய
**கு.ப. அசோகன்.** 03-08-2025